**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No. 13 of 2017
Deposition of D.W.2
Name of the Witness: திரு.மாணிக்கம்
Date : 04.08.2025

**வாதி குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

6) எங்கள் பூர்வீக சொத்தின் சர்வே எண் 479/5ல் 1 ஏக்கர் 29 சென்ட், சர்வே எண் 511/17ல் 95 சென்ட் என்றால் சரிதான். சர்வே எண் 479/5ல் கிணறு, மின்மோட்டார் உள்ளது. சர்வே எண் 479/5ல் என் அப்பா விவசாயம் செய்து வருகிறார், ஐந்து வருடங்களாக தான் வருமானம் வருகிறது. நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. என் அப்பா இந்த சொத்தை ஈடுகட்டி அடமான கடன் வாங்கியிருக்கிறாரா என்று எனக்கு தெரியவில்லை. எனக்கு சிறுவயதாக இருக்கும் போது கடன் வாங்கினாரா என்று எனக்கு தெரியவில்லை. என் அப்பா பால் கறக்கும் மாடு வைத்திருக்கவில்லை.

7) 1982ல் வேலைக்கு சேர்ந்து விட்டேன். என் அப்பா 25.01.1989ல் கிருஷ்ணகிரி கூட்டுறவு நிலவள வங்கியில் சர்வே எண் 479/5, சர்வே எண் 511/17ஐ ஈடுகட்டி பால் மாடு வாங்குவதற்கும், வீடு கட்டுவதற்கும் அடமான கடன் வாங்கியிருந்தார் என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது. அந்த கடன் பத்திரத்தில் என்னையும், மணிவேலுவையும் தரப்பினராக காட்டி மகேந்திரனை மைனராக காட்டி அடமான கடன் வாங்கப்பட்டுள்ளது என்றால் அந்த அடமான பத்திரத்தில் நானும் கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரியாக தெரியவில்லை. அந்த

அடமானபத்திரம் பற்றி வில்லங்க சான்றிதழில் குறிப்புள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. என் அப்பாவிற்கு வருமானமே இல்லை என்றும், நான் தான் எல்லாமே செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அப்பா விவசாயம் செய்து வந்தும், என் அம்மா பால் மாடு வைத்து வியாபாரம் செய்து என்னையும் அவருடைய மற்ற பிள்ளைகளையும் பராமரித்து வந்தார்கள் என்றால் நான் வேலைக்கு போகும் வரை அவர்கள் தான் எங்களை பராமரித்து வந்தார்கள்.

*8) 18.02.1993*ல் என் அப்பா சர்வே எண் **511/15**ல் **25** சென்ட் ஒரு சொத்தை ஒரு சின்னான் என்பவரிடம் கிரையம் வாங்கினார் என்றால் என் அப்பா பெயரில் கிரைய பத்திரம் உள்ளது. ஆனால் நான் தான் கிரையம் வாங்கி என் அப்பா பெயரில் கிரையம் செய்தேன். *7.4.1993*ல் குள்ளம்மாள், மாதம்மாள் என் அப்பா சர்வே எண் **511/10**ல் *49* சென்ட் கிரையம் வாங்கினார் என்றால் என் அப்பா பெயரில் கிரைய பத்திரம் உள்ளது. ஆனால் நான் தான் கிரையம் வாங்கி என் அப்பா பெயரில் கிரையம் செய்தேன்.

*9) 14.06.1993*ல் ராமன், சண்முகம், சரவணன் என் அப்பா சர்வே எண் **528/1**இல் *14* சென்ட் கிரையம் வாங்கினார் என்றால் என் அப்பா பெயரில் கிரைய பத்திரம் உள்ளது. ஆனால் நான் தான் கிரையம் வாங்கி என் அப்பா பெயரில் கிரையம் செய்தேன். மேற்சொன்ன *4* சொத்துக்களும் என் அப்பா பெயரில் தான் கிரைய பத்திரங்கள் உள்ளது என்றால் சரிதான். இந்த சொத்துக்களுக்கு உரிய முத்திரை கட்டணம்

செலுத்ததால் பதிவு செய்யப்படாமல் நிலுவையில் வைக்கப்பட்டது என்றால் சரிதான். உரிய முத்திரை கட்டணம் செலுத்தி என் அப்பா அந்த ஆவணங்களை வாங்கினார் என்றால் சரியல்ல. நான் தான் உரிய பணம் செலுத்தி 1994ல் வாங்கினேன். இந்த சொத்துக்களுக்கு பட்டா என் பெயரில் உள்ளது என்றால் சரிதான்.

10) என் அப்பா விவசாயம் செய்து, பால் மாடுகளை வைத்து வியாபாரம் செய்து அதில் வந்த பணத்தை வைத்து எங்களை படிக்கவைத்து, சொத்துக்களை வாங்கும் அளவிற்கு வருமானம் இருந்தது என்றாலும், அவர் சொத்துக்களை வாங்கினார் என்றால் சரியல்ல. எங்களை வளர்த்து படிக்க வைப்பதற்கு மட்டும் தான் வைத்தார். சொத்துக்களை வாங்கும் அளவிற்கு பணம் இல்லை. எனக்கும் என் அப்பாவிற்கும் சுமுகமான உறவு இல்லை, பிரச்சனை தான். 2013 2014லிருந்து எனக்கும் அவருக்கும் பிரச்சனை இருந்து வருகிறது. எனது மற்ற சகோதரர்கள் மணிவேல், மாதையன், மகேந்திரனிடம் என் அப்பா தற்போதும் பாசமாக இருக்கிறார், என்னை மட்டும் ஒதுக்கி வைத்து விட்டார்.

11) நாங்கள் எல்லோரும் வேலைக்கு போய் சம்பாதித்து மகேந்திரனை தவிர மற்ற மூவரும் ஒசூர் வீட்டு வசதி வாரியத்திடம் தனி தனியாக சொத்துக்களை வாங்கியிருக்கிறோம். மணிவேல் வாங்கிய சொத்தின் விவரம் MIG 396. அவருக்கு எப்போது அந்த மனை ஒதுக்கப்பட்டது என்று தெரியவில்லை. மாதையனுக்கு மனை

ஒதுக்கப்பட்டது. மாதையனுக்கு MIG 607 ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மாதையன், மணிவேல் மனைகளுக்கான பணத்தை செலுத்தி கிரையம் பெற்று கொண்டார் என்றால் எனக்கு தெரியாது. ஆனால் மாதையன், மணிவேல் பெயரில் அந்த மனைகள் உள்ளது. அந்த மனைகளுக்கான பணத்தை செலுத்தியுள்ளார்கள். அவர்கள் செலுத்தாத போது நான் அப்பஅப்ப கட்டியிருக்கிறேன். எவ்வளவு பணம் செலுத்தினேன் என்று நியாபகம் இல்லை, ரசீது வைத்துள்ளேன். மாதையன் வெளியூரில் இருந்ததால் என்னிடம் பணத்தை கொடுப்பார் என்றாலும், நான் அவருடைய மனைக்காக நான் பணத்தை செலுத்தினேன் என்றால் சரியல்ல. நான் செலுத்திய பணத்தை நான் கேட்டு இருக்கிறேன், ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மணிவேல் என்னை அவர் வாங்கிய மனைக்காக முகவராக என்னை நியமிக்கவில்லை.

12) 2004ல் என் அம்மாவும், மாதையனும் கூட்டாக ஒரு சொத்தை வாங்கியிருக்கிறார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் எனக்கும், என் மனைவிக்கும் நோட்டீஸ் வந்தது என்றால் சரிதான். சம்மனை பெற்று கொண்டு நான் ஆஜராகாததால் வழக்கு ஒருதலை பட்ச தீர்ப்பானது என்றால் சரிதான். அந்த ஒருதலை பட்ச தீர்ப்பை ரத்து செய்ய சொல்லி ஐ.ஏ 6/19 மனு போட்டு அது உத்திரவான பிறகு 2019ல் பதிலுரை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். என் மனைவி இந்த வழக்கில் 3ம்

பிரதிவாதி, அவருக்காகவும் நான் பதிலுரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய பதிலுரையில் நான் 14ம் பத்தியில் என் அம்மாவும், வாதியும் சேர்ந்து வாங்கிய கிரைய பத்திரம் என்னிடம் கொடுத்தாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான், என் அம்மா தான் என்னிடம் கொடுத்தார். என் அம்மா இந்த வழக்கில் பதிலுரை தாக்கல் செய்துள்ளார், என் அம்மா பதிலுரை தன்னிச்சையாக செய்யவில்லை. வாதி மற்ற என்னுடைய சகோதரர்கள் சேர்ந்து பதிலுரை தாக்கல் செய்துள்ளார்கள்.

13) என்னுடைய பதிலுரையை தாக்கல் செய்யும் போது வா.சா.ஆ.6 12.12.2001 கிரைய ஒப்பந்தம் என்னிடம் தான் இருந்தது. அதை பற்றி பதிலுரையில் சொல்லவில்லை என்றால் சரிதான், ஆனால் பணம் நான் தான் கொடுத்தேன். என் அம்மாவும், வாதி வாங்கிய சொத்தின் மொத்த பரப்பளவு 4.63 ஏக்கர். கிரைய ஒப்பந்தம் 4 ஏக்கருக்கு மட்டும் தான் போடப்பட்டது. ஆனால் 4.63ஏக்கருக்கு கிரைய பத்திரம் ஏற்பட்டது. பி.சா.ஆ.6 கிரைய ஒப்பந்தத்தில் சுமார் 4 ஏக்கர் என்று தான் குறிப்பிபடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிரையத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பாக நிலத்தை அளக்கும் போது அளவு 4.63ஏக்கர் என்று தெரியவந்தது. 25.02.2004ல் கிரையம் ஏற்பட்டது. கிரையத்திற்கு முன்பாக 8 தவணைகளாக ரூபாய் 8,05,000/- சொத்தின் உரிமையாளர்களுக்கு கொடுத்தேன். நான் சொல்வது பொய் என்றாலும் பி.சா.ஆ.6ஐ பொய்யாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

கிரைய ஒப்பந்தம் என் அப்பா பெயரில் உள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.6ல் கண்ணு (எ) மாதையனுக்கு பிறகு மகேந்திரன் என்று இடைசெருகலாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்தில் நிலம் விற்றவர்களும், மாணிக்கம், மகேந்திரன் மட்டும் தான் கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். என் அப்பா கிரைய ஒப்பந்தமே எழுதி கொடுக்கவில்லை என்பதால் தான் என் அப்பாவின் கையெழுத்து இல்லை என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தத்தில் என் அப்பாவின் பெயர் உள்ளது. என் அப்பாவிற்காக நான் தான் கையெழுத்து போட்டேன்.

14) பி.சா.ஆ.6 முதல் பக்கத்தில் 12 வரியில் 4க்கு அருகே 5 மகேந்திரன் என்று இடைச்செருகலாக குறிப்பிடப்படப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.6ல் முதல் பக்கத்தில் கீழே இருந்து 2வது வரியில் 4க்கு பக்கத்தில் 5 என்று இடைச்செருகலாக குறிப்பிடப்படப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த கிரைய ஒப்பந்தத்தில் 6 மாத கால வாய்தா என்று குறிப்பிப்படப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.6ல் முதல் பக்கத்தில் கீழிலிருந்து 4 வது வரியில் 4ம் இலக்கமிட்டவர் தான் கொடுத்துவிட வேண்டியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், 5ம் இலக்கமிட்டவர் பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.6ல் என்னிடமிருந்து பணம் பெற்று கொண்டதாக அதில் எழுதப்பட்டுள்ள மேற்குறிப்புகளில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ1ல் கண்டுள்ள

சொத்தை வாங்குவதற்கு நான் தான் முழு பணம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

15) மாதையனும் அரசாங்க ஊழியர் தான், சொத்தை வாங்குவதற்கு அரசாங்கத்திடம் அனுமதி பெறவில்லை என்று என்னிடம் அவர் சொன்னார். என்னுடைய பதிலுரையில் பாரா 13ல் மாதையனுக்கு சொத்தை வாங்குவதற்கு வசதியே இல்லை என்றும், நான் தான் சொத்தை வாங்கி கொடுத்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. அவர் சொத்தை வேறு இடங்களில் வாங்கியிருக்கிறார். என்னுடைய பதிலுரையில் 14வது பத்தியில் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தின் பேர்பாதியை என் அம்மா எனக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. மாதையன் இந்த சொத்தை வாங்குதற்கு பணமே கொடுக்கவில்லை என்று சொல்கிறேன். வா.சா.ஆ.1ல் மாதையனும், என் அம்மாவும் கையெழுத்து போட்டு இருக்கிறார்கள் என்றால் சரிதான். இந்த பத்திரத்தை மாதையன் தாக்கல் செய்து அதற்குண்டான முத்திரை கட்டணத்தை கட்டியதாக உள்ளது என்றால் சரிதான். ஆனால் அவர் பணம் எதுவும் கட்டவில்லை. அந்த ஆவணத்திற்குண்டான முத்திரை கட்டணம் குறைவாக இருந்ததால் அவர் தான் மேற்கொண்டு கட்டினார் என்றால் சரியல்ல.

(தொடர் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)